# ஒவ்வொருவருக்கும் அவ்வப்பொழுது மோசமான நாள் அமைவதுண்டு [லூக்கா 10:38-42]

ஒவ்வொருவருக்கும் அவ்வப்பொழுது மோசமான நாள் அமைவதுண்டு. சில காலத்துக்கு முன்பு, கட்டிடத் தொழிலாளி ஒருவர் பெற்றிருந்த மோசமான ஒரு நாளைப்பற்றி நான் வாசித்தேன். நிறுவனத்தின் விபத்துப் படிவத்தில் அவர் எழுதி யிருந்த அறிக்கை இதுதான்:

*நான் கட்டிடத்துக்குள் நுழைந்த போது, மேலிருந்து சில செங்கற்களைப் புயல்காற்று தள்ளியிருந்ததைக் கண்டேன். எனவே இரண்டு பீப்பாய்கள் நிறைய செங்கற்களை அடுக்கி அவைகளை கம்பி மற்றும் அதைச் சார்ந்த உபகரணம் மூலம் மேலேற்றினேன். சிதலமடைந்த பகுதியைச் செப்பனிட்ட பிறகு, அநேக செங்கற்கள் எஞ்சியிருந்தன. பிறகு நான் கீழே சென்று கம்பி உபகரணத்தினை கீழ்நோக்கி இழுத்தேன். துரதிருஷ்டவசமாக, அச்செங்கற்கள் எனது எடையை விட அதிகமாயிருந்ததால், என்ன நடக்கிறது என்று நான் யோசிக்கு முன்னதாக, அந்தப் பீப்பாய் கீழ்நோக்கி வந்து என்மீது மோதியது.*

*நான் தரையிலிருந்து அதிக உயரத்திலிருந்தபடியாலும், குதித்துத் தப்பிக்க முடியாது என்பதினாலும், சுவர்ப்பக்கம் தொங்க முடிவு செய்தேன்: அப்போது பீப்பாயானது மிக வேக மாக பாதி வழிவந்துவிட்டதைச் சந்தித்தேன். எனது தோள்மீது பலத்த அடியைப் பெற்றேன். பிறகு உபகரண உத்திரத்தை என் தலையால் முட்டிக்கொண்டு கம்பியின்மீது என் கைவிரல்கள் பதித்த நிலையில் நான் மெதுவாய் மேலேறினேன். பீப்பாய் தரையில் மோதியபோது, வேகமாக மோதியதால் அடியில் உடைந்தது; செங்கற்கள் சிதறின.*

*இப்போது நான் பீப்பாயைக் காட்டிலும் அதிக*

எடையானேன். எனவே நான் மிக வேகமாகக் கீழே செல்ல நேர்ந்தது. பாதி வழியில் அந்தப் பீப்பாய் மேலேறி வந்து எனது கன்னங்களில் பலத்த சிராய்ப்பை ஏற்படுத்தியது. நான் தரையை மோதியபோது, உடைந்த செங்கற்கள்மேல் விழுந்ததினால், அநேக வலியுள்ள காயங்களும், சிராய்ப்புகளும் ஏற்பட்டன. இந்தக் கணத்தில் எனது சிந்தனைத் திறனை நான் இழந்திருக்கவேண்டும், ஏனென்றால் உபகரணக் கம்பியைப் பற்றியிருந்த எனது பிடி நெகிழ்ந்தது. பீப்பாய் மிகவும் வேகமாய்க் கீழ்நோக்கி வந்தது - அது மேலும் ஒருமுறை என் மீது மோதியது. அது என் தலைமீது மோதியதால் நான் மருவத்துவமனை வரலாயிற்று.

ஆகவே எனக்கு மருத்துவ விடுமுறையளிக்கும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

இந்த வேலையாளை என்னால் அடையாளம் காட்ட முடியும்! இவருக்கும், நமக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை; நாமும்கூட அவ்வப்பொழுது இவ்விதமான மோசமான நாளைப் பெறுவதுண்டு.

வேதாகமத்தினூடாக நாம் பார்க்கும்போது, அநேக தனி நபர்களின் நிலைப்படக் காட்சிகள்; அவர்கள் வாழ்க்கையின் சில கணங்கள் ஏவப்பட்ட எழுத்தாளர்களால் எழுதப்பட்டு, காலத்தால் உறைந்துபோயிருப்பதைக் காண முடியும். இந்த எழுத்தாளர்கள், அந்த தனி நபர்கள் விரும்புகின்ற நேரத்தைக் குறித்து எப்போதுமே எழுதியதில்லை! இது நடந்தது எப்படியென்று நாம் புரிந்துகொள்ளமுடியும். ஓட்டுநர் உரிமை அட்டை அல்லது ரேஷன்கார்டில் உள்ளதுபோன்ற மோசமான ஓரிரண்டு புகைப்படங்கள் எப்போதுமே நம்மிடம் இருப்பதுண்டு![1]

லூக்கா 10லிருந்து எடுக்கப்பட்ட இந்தப் பாடத்தில், மார்த்தாள் ஒரு மோசமான நாளைப் பெற்றிருந்த வேளையில் அவளைப் படம் பிடித்த காட்சியைப் படிக்கிறோம்.

மரியாள், லாசரு ஆகியோரின் சகோதரியாகிய மார்த்தாளைக் குறித்து நினைத்த உடன், உங்கள் சிந்தனைக்கு வருவது எது? "ஆம் ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்" (யோவான் 11:27) என்று அவள் இயேசுவிடம் கூறியதை நினைக்கிறீர்களா? புதிய ஏற்பாட்டில் உள்ள மிகப்பெரிய விசுவாச அறிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்-இது மத். 16:16ல்

*பேதுரு செய்த அதே அறிக்கையைப் போன்றதாகும். யோவான் 12ல் அவள், லாசரு, மற்றும் மரியாளோடு இயேசுவின் ஐக்கியத்தில் சந்தோஷமாயிருந்ததை நினைக்கிறீர்களா? எனது யூகம் என்னவென்றால், மார்த்தாளின் பெயரைக் கேட்டவுடன், நம்மில் அநேகர் மார்த்தாளின் வாழ்க்கையில் உள்ள மேற் கண்ட நல்ல விஷயங்களை நினைப்பதில்லை, மாறாக மார்த்தாள் ஒரு மோசமான நாளைப் பெற்றிருந்த போது, லூக்கா 10ல் அவளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள கீழான கருத்தை மட்டுமே நினைத்துப் பார்க்கிறோம்.*

## மார்த்தாள் ஒரு மோசமான நாளைப் பெற்றிருந்த போது

### மிகப் பெரிதாய் ஆரம்பித்த அந்த நாள் (வ. 38-39)

*அந்த நாள் மிகப் பெரிதாய் ஆரம்பித்தது. நமது வேதவசனப் பகுதி, ''பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில்'' (வ. 38அ) என்று தொடங்குகிறது. ''அவர்கள்'' என்பது இயேசுவையும் அவரது பன்னிரெண்டு சீஷர்களையும் குறிக்கிறது. இயேசுவின் பலஸ்தீனிய ஊழிய முடிவில் அவர் எருசலேமுக்குச் செல்லுகையில் இச்சம்பவம் நடைபெற்றது. ''அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார்'' (வ. 38ஆ). இது பெத்தானியாகும் (யோ. 11). இது ஒலிவமலையின் கிழக்குச் சரிவில் எருசலேமுக்கு இரண்டு மைல்களுக்கும் குறைவான தூரத்தில் உள்ளது. அடிக்கடி அவர் செய்ததுபோலவே பெத்தானியில் அவர் தங்கினார்.*

*"அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டாள்" (வ. 38 இ). இரு சகோதரிகள், ஒரு சகோதரன் இருந்த அந்த குடும்பத்தில் மார்த்தாள் மூன்று பேரிலும் மூத்தவளாயிருந்திருக்க வேண்டும். ஒரு வேளை அந்த வீடுகூட அவளுடையதாயிருந்திருக்கலாம்.* NIV *மொழிபெயர்ப்பில், "மார்த்தாள் தனது வீட்டை அவருக் காகத் திறந்தாள்'' என்றுள்ளது. அவள் தனது உபசரிப்புத் தன்மையை இவ்விதமாய் வெளிப்படுத்தினாள்.*

*லூக்கா இச்சம்பவத்தைச் சுருக்கமாய் கூறியுள்ளார். உதா ரணமாக, லாசரு அங்கிருந்ததைப்பற்றி அவர் ஒன்றும் கூற*

வில்லை. இயேசுவோடு பிரயாணம் செய்த சீஷர்களைப்பற்றிய விபரங்களையும் அவர் தரவில்லை. இயேசு விருந்துக்கு அழைக் கப்பட்டபோது, அவர்கள் எங்கு சென்றனர்? இச்சம்பவத்திற்கு அடுத்த வசனத்தில் சீஷர்களைப்பற்றி மறுபடியும் கூறப் படுகிறது (லூக்கா 11:1); எனவே அவர்கள் தூரமாய்ப் போய் விடவில்லை. மார்த்தாளின் வீட்டில் இயேசுவோடுகூட அவர் களும் அழைக்கப்பட்டிருக்கலாம்.[2] லூக்கா 10ல் குறிப்பிட் டுள்ள விருந்திற்கு 16 பேர்[3] அழைக்கப்பட்டிருக்கலாம். நீங்கள் ஒரு பெண்ணாக இருப்பின், சந்தேகத்திற்கிடமின்றி நீங்கள் தலையசைத்து, "மார்த்தாள் அன்று மோசமான நாளைப் பெற்ற தில் வியப்பேதும் இல்லை!" என்று நினைக்கலாம்! பதினாறு பேருக்கு விருந்து தயாரிப்பது சுலபமான பணியல்லவே!

இயேசு தமது சிநேகிதர்களைக் காணச் சென்றபோது, காட்சி இவ்விதமாக ஒரு வீட்டுச் சூழ்நிலையில் தொடங்கு கிறது. ஒருமுறை இயேசு, "நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை" (மத்தேயு 8:20) என்று கூறினார். இருப்பினும் தமது சீஷர்களிடம், சுவிசேஷத்தினிமித்தம் அவர்கள் தங்கள் வீடுகளைவிட்டால், நூற்றுக்காணக்கான வீடுகளைப் பெறுவர் (மாற்கு 10:29-30) என்றும் கூறினார். அது போலவே இயேசுவுக்குச் சொந்தமான வீடு எதுவும் இல்லை யென்றாலும், பலஸ்தீனிய தேசமுழுமையும் அவரை ஏற்றுக் கொள்ளும் வீடுகள் அநேகம் இருந்தன - கப்பர்நகூமில் பேதுரு வின் மாமி, மற்றும் பெத்தானியில் மார்த்தாள் ஆகியோரின் வீடுகள் இதற்கு உதாரணங்களாகும்.

"அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந் தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவரு டைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்" (வ. 39). ஒரு போதகரின் "பாதத்தருகே அமருவது" என்பது இருவிதத்தில் பொருள்படும் அடையாளமாகும். மரியாள் செய்ததுபோல, ஒரு சீஷன் தனது போதகரின் பாதத்தருகே அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்கிறான். அத்துடன் இந்த வாக்கியத்திற்கு உருவகமான பொருள் ஒன்றும் உண்டு: அது "அந்தப் போதக ருக்கு அவன் சீஷன்" என்பதேயாகும். பவுல் தாம், "கமாலியே லின் பாதத்தருகே அமர்ந்து கற்றேன்"[4] (அப். 22:3) என்று குறிப்

பிட்டார். மரியாள் பற்றிய காட்சி வேதத்தில் வரும் ஒவ்வொரு முறையும் அவள் இயேசுவின் பாதத்தருகிலேயே இருக்கிறாள். லாசரு மரித்த போது, மரியாள் இயேசுவின் பாதத்தில் விழுந்து அழுதாள் (யோவான் 11:32). பெத்தானியில் இன்னொரு விருந்துக்கு இயேசு சென்றபோது மரியாள் அவரது பாதத்தை அபிஷேகம் செய்து பணிந்தாள் (யோவான் 12:3). ரபீக்கள் பொதுவாகப் பெண்கள் தங்கள் பாதத்தருகில் அமருவதை அனுமதிக்க மாட்டார்கள்; அநேகர், பெண்களை கற்றுக் கொள்ளும் திறமையற்றவர்கள் என்றே கருதினர். இயேசு இப்படிப்பட்ட தப்பெண்ணம் எதுவுமின்றியிருந்தார். இவ்விதமாய் மரியாள் இயேசுவின் பாதத்தருகில் அமர்ந்து, அவரின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஒலிவமலையின் கிழக்குச்சரிவில் உள்ள அந்தச் சிறு வீட்டிற்குச் சற்றுநேரம் உங்கள் கவனத்தைத் திருப்புங்கள், இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவர் கூறுவதை நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அங்குள்ள காற்றில் நாவில் நீர் சுரக்கச்செய்யும் உணவின் இனிய நறுமணம் நிறைந்துள்ளது; இது சற்று நேரத்தில் நிச்சயம் நல்ல விருந்தை அனுபவிக்கலாம் என்று உறுதியளிக்கிறது. (மார்த்தாள் நல்ல சமையல்காரி என்பதை நகரில் ஒவ்வொருவரும் அறிவார்கள்!) இது உண்மையில் மனம் மயக்கும் ஒரு காட்சியாகும். சரீரம் மற்றும் ஆவிக்குரிய விஷயங்களின் இனிய கலவை அங்கிருந்ததால் அது உண்மையிலேயே மிகவும் அற்புதமான நாள்தான்.

நமது நடக்கை சரியானதாயிருந்தால், ஒவ்வொரு நாளும் சிறப்பானதாயிருக்கக் கூடும். "இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்" (சங்கீதம் 118:24). மார்த்தாளைப்போலவே நாமும்கூட கர்த்தரை நமது வாழ்விலும், வீடுகளிலும் அழைத்து, அவருடன் ஐக்கியத்தை சந்தோஷமாய் அனுபவிக்க முடியும்: அவர், "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடு போஜனம் பண்ணுவான்" (வெளி. 3:20) என்றார். எந்த நாளும், இந்தநாள் கூட உங்களுக்கும் எனக்கும் மாபெரும் நாளாக முடியும்!

### *சோகமாய் மாறிய நாள் (வ. 40)*

*வசனம் 40ல் மார்த்தாளின் இந்த நாள் சோகமாய் மாறுகிறது.* KJV *மொழிபெயர்ப்பில், "மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து" என்ற மிகவும் பழக்கப்பட்ட வார்த்தைகள் உள்ளன (வ. 40அ).* NASB *மொழிபெயர்ப்பில், "மார்த்தாள் தனது தயாரிப்புகள்[5] எல்லாவற்றினாலும் கவனம் சிதறடிக்கப்பட்டாள்" என்று குறித்துள்ளது. "வேலைகள் செய்வதில்" அல்லது "கவனம் சிதறடிக்கப்படுதல்" என்ற வார்த்தை "தனது கவனத்தை அலையவிடுதல்" என்ற பொருள்படும் கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*மார்த்தாளின் வீடு ஒரே அறை கொண்டதாயிருந்திருக்கலாம் (அந்நாட்களில் அநேக வீடுகள் ஒரே அறை கொண்டவையாய் இருந்தன). அங்கு ஒரு மூலையில் மார்த்தாள் சமைத்துக்கொண்டிருக்க, இயேசு வேறொரு மூலையில் மரியாளுடன் பேசிக்கொண்டிருந்தார். ஒருவேளை அந்த வீட்டில் ஒன்றிற்கு மேற்பட்ட அறைகள் இருந்திருந்தாலும் மார்த்தாள் இருந்த அறை, இயேசு இருந்த அறைக்கு வெகு அருகிலேயே இருந்திருக்கும்.[6] மார்த்தாள் சமைத்துக் கொண்டிருந்தபோது இயேசுவின் போதனைகளைக் கவனித்திருக்க முடியும். "ஆனால் மார்த்தாளின் கவனம் சிதறியது"; அவள் மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது.*

*நம்மில் அநேகர் மார்த்தாளைப் போல் இருக்கிறோம். நாம் வேத வகுப்பு அல்லது ஆராதனையில் கலந்து கொள்ளுகிறோம். தேவனுடைய வார்த்தை அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது, ஆனால் நமது இருதயம் இவைகளை விட்டு நழுவிச் சென்றுவிடுகிறது. சில சமயங்களில், நமது சிந்தனைகள் மார்த்தாளைப் போலவே, மதிய உணவிற்கு என்ன செய்வது என்று அலைபாய ஆரம்பித்துவிடுகிறது.[7]*

NIV *மொழிபெயர்ப்பில், "மார்த்தாள் தான் செய்த எல்லா வேலைகளினாலும் கவனம் சிதறினாள்" என்று கூறுகிறது. அவள் சிந்தனையில் இவ்வேலைகள் "செய்யப்பட" வேண்டும் என்ற கருத்து மட்டுமே இருந்தது. இயேசு இப்படி ஒரு விருந்தைக் கேட்டதாகவோ அல்லது எதிர்பார்த்ததாகவோ எந்த குறிப்பும் இல்லை, இருப்பினும் இவ்விருந்தைத் தயாரித்து*

அளிப்பது அவசியம் என்று மார்த்தாள் முடிவு செய்தாள். பல வேளைகள் நமக்கு மோசமான நாளாய் அமைந்து விடுபவை, நமது சிந்தனையில் உண்டாகும் காரணமற்ற எதிர்பார்ப்புகளினாலே - மற்றவர்கள் சிந்தனையில் தோன்றுபவை அல்ல- அவ்விதம் அமைகின்றது.[8] மார்த்தாளின் நோக்கங்கள் சரியானவை என்பது உறுதி. அவள் இயேசுவுக்கு ஒரு விருந்து தயாரிக்க விரும்பினாள்; இயேசுவுக்கு தன்னால் முடிந்த சிறந்த உணவையளித்து அவரை கௌரவிக்க விரும்பினாள். இருப்பினும் விருந்து தயாரிப்பது என்பது “கட்டாயம்” செய்யவேண்டிய வேலை அல்ல.[9]

அவள் அவ்வேலையைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்று எண்ணியதால் தான் இயேசுவிடம் வந்து, “ஆண்டவரே, நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும்” என்றாள் (வ. 40ஆ). NIV மொழி பெயர்ப்பு, “எனது சகோதரி எல்லா வேலையையும் நானே செய்யும்படி விட்டுவிட்டாள்” என்று கூறுகிறது. இப்படிக் கூறும்முன், மார்த்தாள் தன் சகோதரிக்கு “மறைவான குறிப்புகள்” சிலவற்றைத் தந்திருப்பாள் என்று நான் கற்பனை செய்கிறேன். சட்டி, பானைகளை சத்தம் எழுப்பும்படிப் போட்டு, அலமாரியின் கதவுகளை அறைந்து சாத்தி, மரியாள் இருந்த திசையை நோக்கி அர்த்தமுள்ள பார்வையைச் செலுத்தி, “எப்படி இந்த உணவை நான் தயார் செய்து முடிப்பேன்?” என்று புலம்பியிருக்கலாம்.[10]

பெண்கள் ஒருவேளை இக்காட்சியை நன்கு உணரக் கூடும். உங்கள் வீடு உறவினர்களால் நிறைந்துள்ளது,[11] அவர்கள் உங்கள் வரவேற்பறையில் அமர்ந்துகொண்டு, சிரித்துப் பேசிக் கொண்டிருக்கின்றனர். நீங்கள் மட்டும் சமையலில் உழன்று கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் உள்ளுக்குள் வெந்துகொண்டு, “ஏன் யாரேனும் உள்ளே வந்து எனக்கு உதவி செய்யவில்லை” என்று வியப்படைகிறீர்கள்.

மார்த்தாள் பொறுமையிழந்தாள், எனவே அவள் இயேசுவினிடத்தில் வந்து புகார் செய்தாள், “ஆண்டவரே” என்று கதறினாள், “உமக்குக் கவலையில்லையா?” நாமனைவரும் அங்கிருக்கிறோம். நமக்கு ஒரு நாள் மோசமாகிவிடுகிறது. நாம் திட்ட

மிட்டபடி எதுவும் நடைபெறுவதில்லை. நாம் ஜாக்கிரதையாய் இல்லையென்றால், மார்த்தாள், “இயேசுவே, எனக்கு இப்படி பிரச்சனைகள் நிறைய உள்ளதே, உமக்குக் கவலையில்லையா?” என்று கேட்டதுபோலவே நாமும் கேட்டு, வலையில் விழக் கூடும்.[12]

மார்த்தாள், “ஆண்டவரே நான் தனியாய் வேலை செய்யும் படி என் சகோதரி விட்டு வந்ததைக் குறித்து நீர் கவலைப்படுவ தில்லையா” என்று கூறினாள். என்னை விட்டு என்பதன் மூலம், மரியாள் முதலில் அவளுக்கு உதவி செய்தாள், பின்பு அவளை விட்டு இயேசுவின் உபதேசத்தைக் கேட்க வந்தாள் என்று நாம் அறிகிறோம். விருந்தாளிகளை வரவேற்பவர் என்ற முறையில், உணவு தயாரிப்பது போலவே, வந்தவர்களுடன் உரையாடி விசாரிப்பது என்பதும் முக்கியமானதாகும். இருப்பினும் இந்த அம்சம் மார்த்தாளிடம் காணப்படவில்லை. அவள் களைத்து, இளைப்படைந்து, சந்தோஷமின்றியிருந்தாள். அவள் தயாரித்த உணவுகளை மேஜையில் எடுத்து வைக்கும் அதே வேளையில், சில பதார்த்தங்களைத் தயாரிக்க யாரேனும் ஒருவர் உதவ வேண்டும் என்ற நோக்கத்தில், “ஆண்டவரே ... எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும்” என்று சொன்னாள். (ஒரு வேளை உங்கள் குழந்தை உள்ளே வந்து, “அம்மா, அவளை சும்மாயிருக்கச் சொல்லுங்கள்” என்றோ அல்லது, “அப்பா, என்னைத் தனியாக விட்டுவிடும்படி அவனுக்குச் சொல்லுங் கள்” என்று கூறுவது போன்றதாகும்). மார்த்தாள், மரியாளை மட்டுமல்ல இயேசுவையும் கூட திட்டினாள்!

மார்த்தாளின் நல்ல நாளை, மோசமானதாகும்படி அவளுக்கு நேர்ந்த எல்லாவற்றையும் நான் அறியேன். உணவுப் பொருள்களில் குறைபாடு, தயாரித்த உணவுகளில் தடுமாற்றம், தயாரிப்பில் சில கோளாறுகள் அல்லது அவளுக்கு தலையைப் பிளக்கும் தலைவலி முதலிய எது வேண்டுமானாலும் இருந்தி ருக்கலாம். நான் அறிந்த ஒன்று: எது நடந்திருந்தாலும், மார்த் தாள் புகார் கூறியதன் மூலம் அந்நாளை இன்னும் மோசமாக் கினாள். இதுபோன்று உங்களுக்கு எப்போதாகிலும் நடந்தது உண்டா? ஏதோ சில ஆகாத காரணங்களினால், நமக்கு ஒரு நாள் மோசமாகும்போது, நம்மோடு உள்ள அனைவருக்கும் அந்நாள் மோசமாகிவிடவேண்டும் என்று முடிவு செய்கிறோம்.

ஒரு அற்புதமான வீட்டுக் காட்சியுடன்-இயேசு தேவ வசனத்தைப் போதிக்க, மரியாள் அவர் பாதத்தில் அமர்ந்திருக்க, உணவின் நறுமணம் கமழ - ஒரு நல்ல நாளாக - இதை ஆரம்பிக்கக் கண்டோம். பின்பு அந்நாள் மோசமானதாக மாறியது; மார்த்தாளின் வீட்டில் ஒரு அந்தகாரம் கவிழ்ந்தது. முக்கியமற்றவைகளுக்காக மார்த்தாள் மிகவும் கவலைப்பட்டாள்.

ஒரு நல்ல நாளை மோசமாக்குவதென்பது கடினமானதல்ல. கொஞ்சம் பொறுமையின்மை கொஞ்சம் தன்னிரக்கம் ... சரியாய் யோசிக்காமல் சிலவார்த்தைகள் ... இவை போதும்! அநேக சமயங்களில் நாம் மார்த்தாளைப் போல, புகார் செய்யும்படி நமது வாயைத் திறந்தால், அந்த நாள் மோசமாகிவிடுகிறது.

**மோசமாக மாறின ஒருநாள் - மறுபடியும் நல்ல நாளாகிறது (வ. 41-42)**

சற்றுநேரம் அந்தநாள் மோசமாக மாறிற்று. மார்த்தாள் இயேசுவை கடிந்துகொண்டாள், இப்போது அவள் கடிந்து கொள்ளப்படுகிறாள்:

> இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக, ''மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்; தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்" என்றார். (வ. 41-42)

வேதத்தில் உள்ள உரையாடல்கள் அனைத்தும் ஒலிப்பதிவு கருவியில் பதிவு செய்யப்பட்டிருந்தால், அவைகளின் தொனியை நாம் உணரமுடியுமே என்று நான் அடிக்கடி விரும்புவதுண்டு. எப்படியிருப்பினும் மார்த்தாளின் கூற்று எந்தத் தொனியிலிருந்திருக்கும் என்று நாம் யூகிக்க அவசியமில்லை. யோவான் 11:5ல் இயேசு மார்த்தாளிடம் அன்பாயிருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படியிருக்க, இயேசு கடின வார்த்தைகளை, கண்டிப்பான குரலில் பேசியிருப்பார் என்பது ஏறக்குறைய நினைத்துப் பார்க்கவே முடியாதது ஆகும். வெறுப்பும், தலையசைப்பும் கூடிய ஒரு வாக்கியம் அவரிடம் வெளிப்பட்டது: "ஓ மார்த்தா ... மார்த்தா ..." இயேசுவின் வார்த்தைகள் கவலையுடன் இருப்பினும், அவைகளில் அன்பும்

இருந்தது.

"மார்த்தா, மார்த்தா நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்." புதிய ஆங்கில வேதாகமத்தில், "நீ அநேக காரியங்கள்பற்றி அமளியுண்டாக்கி, அமைதியற்று இருக்கிறாய்" என்று கூறப்படுகிறது. "அமளி" அல்லது "அமைதி யற்று" என்ற சொல், மூலபாஷையான கிரேக்கில், "துண்டா டுதல்" என்ற பொருளுடைய சொல்லாக உள்ளது. "மார்த்தாள் தனக்குள் துண்டுதுண்டாகச் சிதறிப் போனாள்."[13] இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அவள் அதைச் செய்ய நினைத்தாள். அவள் தனக்குள் தலைகீழாகப் புரண்டாள், அது அவளின் புறத்தோற்றக் கூறுகளைப் பாதித்தது. அவளைச் சுற்றியிருந்த ஒவ்வொருவருக்கும் அன்றைய நாளை அவள் பரிதாபமுள்ள தாக ஆக்கினாள்!

இயேசு தொடர்ந்து, "ஆனால் சில காரியங்களே அவசிய மானவை, உண்மையில் ஒன்றே ஒன்றுதான் அவசியமானது" என்றார். சில விரிவுரையாளர்கள், இயேசு ஒன்றே ஒன்றுதான் தேவை என்னும்போது, ஒரே ஒரு உணவு வகை போதுமானது என்று கூறுவதாகக் கருதுகின்றனர். ஆனால் உணவைப்பற்றி இயேசு பேசினாரா என்று நான் சந்தேகப்படுகிறேன். ஆனாலும் எளிய உணவோடு, சந்தோஷமான நிலையில் மார்த்தாள் இருந்திருந்தால், அனைவரும் அகமகிழ்ந்திருப்பார்கள்!

அடுத்துத் தாம் கூறியதில் இயேசு "தேவையான" ஒன்றைப் பற்றி விளக்குகிறார்: ''மரியாள் நல்ல பங்கைத் தேர்ந்து கொண்டதால், அது அவளை விட்டெடுபடாது.'' ஆவிக் குரியதை மரியாள் தேர்ந்துகொண்டாள்; நித்தியத்திற்குரியதை மரியாள் தேர்ந்துகொண்டாள்; இயேசுவின் உபதேசத்தைக் கவனிப்பதை மரியாள் தேர்ந்துகொண்டாள். சரீர உணவைப் பார்க்கிலும், ஆவிக்குரிய உணவில் அவள் அதிக அக்கறையாய் இருந்தாள்.

"அநேக காரியங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்கு வதினால்" நம்முடைய பல நல்ல நாட்கள் மோசமானதாகி விடுகின்றன. இவைகள் இன்றிருந்து நாளை இல்லாமல் போகின்ற விஷயங்களாகும். இருபது வருடங்களில் இல்லாமல் போய்விடும் விஷயங்களைப் பார்க்கிலும், நித்தியமானவை அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டியவைகளாகும். சில

வேளைகளில் நிலைத்திருக்க வேண்டிய தேவனுடைய உறவைக்கூட நாம், நிலையில்லாத காரியங்களுக்காகக் கவலைப்பட்டுக் கெடுத்துவிடுகிறோம்.

இந்த வேதவசனப் பகுதியைப் படிக்கும்போது, பெற்றோர் என்ற வகையில் இப்பகுதியை எனக்கு நானே நடைமுறைப் படுத்துகிறேனா என்று யோசியாமல் இருக்க முடிவதில்லை. எனது குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகளுக்கு எதை விட்டுச் செல்லுவதில் அக்கறையாய் இருக்கிறேன்? அழிந்து போகும் செல்வங்களை விட்டுச்செல்லுவதில் அதிக அக்கறை காட்டுகின்றேனா? தேவனுடைய வசனத்தை நேசித்தல்[14] என்ற அவசியமான ஒரே ஒரு காரியத்தைப் பற்றிக்கொள்ள அவர்கள் நேரம் ஒதுக்கும்படி செய்கிறேனா?

இயேசு மார்த்தாளைக் கடிந்துகொண்டபோது, அவளுக்கு அந்த நாள் மிகவும் மோசமாகியது. உண்மையில் அவர் அவளிடம், “நீ எப்பொழுது வேண்டுமானாலும் சமைக்கலாம், ஆனால் நான் சற்றுநேரமே இங்கிருப்பேன். எனவே வாய்ப் பைப் பயன்படுத்திக்கொள்'' என்று கூறினார். நம் எல்லா ருக்கும் இப்பாடம் தேவை. நமது முக்கிய வேலைகளை குழப்பி விடக்கூடிய செயல் மிக சுலபமானது.

அதேசமயம், இயேசுவின் வார்த்தைகளை மார்த்தாள் சிந்தித்தபோது, அந்தநாள் அவளுக்கு நல்ல நாளாகியது என்பதும் உறுதி. எஞ்சியிருந்த அந்தநாளை நான் இப்படியாகப் பார்க்கிறேன்; முதலாவது அங்கு ஒரு செயற்கையான சூழ்நிலை இருந்தது, மார்த்தாள் உணவைத் தயாரித்துப் பரிமாறி முடித்தாள். அவள் மனம் மகிழும் வண்ணம் இயேசு உணவைப் பற்றிப் புகழ்ந்து பேசினார். இயேசுவின் வார்த்தைகள் அவள் இருதயத்தில் ஆழப்பதிந்தபடியினால் மார்த்தாள் அமைதி யாய்ச் சிந்தித்தாள்.

மார்த்தாளுக்குள் ஏற்பட்ட மாற்றமே, என்னை அந்தநாளின் பிற்பகுதியை இவ்விதமாய் சித்தரிக்க தூண்டியது. யோவான் 12ல் மார்த்தாள் இயேசுவுக்குப் பணிவிடை செய்வதை நாம் அடுத்துக் காணுகின்றோம். அந்தச் சமயத்திலும் மார்த்தாள் ஒரு பெரிய கூட்டத்திற்கு விருந்து தயாரிக்க வேண்டியிருந்தது - ஆனால் மார்த்தாள் அப்போது புகார் செய்யவில்லை. அச்சமயம், மரியாள் - குடும்பத்தின் சொத்தா

யிருந்த, குடும்பத்தின் சேமிப்பாயிருந்த-விலையேறப் பெற்ற நளதம் என்ற பரிமள தைலக் குப்பியைக் கொண்டு வந்து, அதை முழுவதும் இயேசுவின் பாதத்தில் ஊற்றி அபிஷேகம் செய்த போதும்கூட புகார் செய்யவில்லை. சில வாரங்களுக்கு முன்னான இந்த "மோசமான நாளில்," மார்த்தாள் தேவையான ஒன்றைப்பற்றிக் கற்றிருந்தாள். அது அவளைவிட்டு எடுபடக் கூடாதிருந்தது!

நமக்கு நடந்த மோசமானவைகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும்போது, ஒரு மோசமான நாளும், நல்ல நாளாகி விடுகிறது.

மார்த்தாள் தனது மோசமான நாளில்இருந்து பிரயோஜன மடைந்தாள் என்று தெரியவருகிறது. வேதத்தில் மார்த்தாளைப் பற்றியுள்ள மற்ற சில காட்சிகளைச் சித்தரிக்காமல் இப்பாடத்தை முடிப்பதில் எனக்கு விருப்பமில்லை. யோவான் 11க்கு திருப்பி, மார்த்தாளை, அவளுக்குக் கிடைத்த ஒரு நல்ல நாளில் சந்திப்போம்.

லாசரு மரித்தபின், இயேசு பெத்தானிக்குச் சென்றபோது, மார்த்தாள் இயேசுவிடம், "ஆண்டவரே, நீர் இங்கேயிருந் தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்" (யோவான் 11:21-22). இது விசுவாசத்தின் ஒரு மாபெரும் வெளிப்பாடு அல்லவா? பின்பு, 27ம் வசனத்தில் மறுபடியும் அவளைக் கவனியுங்கள்: "ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்." "நான் விசுவாசிக்கிறேன்" என்பது ஒரு முற்று வினைச் சொல்லாகும். இது மார்த்தாள் கடந்த காலத்தில் விசுவாசிக்கத் தொடங்கி, விசுவாசமானது அவள் உள்ளத்தில் ஊன்றக் கட்டப்பட்டதைக் குறிக்கின்றது. பிற்பாடு யோவான், "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங் களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசு வாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத் தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவா. 20:30-31) என்று எழுதினார்.

இயேசுவைப்பற்றி விளக்க மார்த்தாள் பயன்படுத்தின அதே வார்த்தைகளை யோவானும் பயன்படுத்தினார். நீங்களும், நானும் கொண்டிருக்க வேண்டிய விசுவாசத்தை விளக்க யோவான், மார்த்தாளைப் பயன்படுத்தினார்!

மோசமான நாட்களிலிருந்து நாம் கற்றுக் கொண்டு, பலம் பெறும்போது, அவைகள் நல்ல நாட்களாகிவிடுகின்றன. காரியம் இப்படியிருக்கின்றதினால், நமது மோசமான நாட்களைப்பற்றி நாம், "தேவன் அந்த நாட்களின்மூலம் என்னைப் போதித்துக் தட்டியெழுப்புகிறார்" என்று கூறலாம். இயேசு நம்மேல் அக்கறையாயிருக்கிறார் என்று இதன் மூலம் நாம் அறியக் கூடும்.

## நாம் மோசமான நாட்களைப் பெறும் போது

நாம் மோசமான நாட்களைப் பெறும்போது கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்கள் எவை? இங்கே சில பாடங்கள் உள்ளன:

### ஒவ்வொருவருக்கும் அவ்வப்போது மோசமான நாட்கள் அமைவதுண்டு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்

வேதம் முழுவதும், அவ்வப்போது மோசமான நாட்களைப் பெற்ற, விசுவாசமுள்ள ஆண்கள், பெண்களின் வரலாறு நிறைந்து காணப்படுகிறது. எலியா மோசமான நாட்களைப் பெற்றிருந்தார். மறுபடியும், மறுபடியும் அந்தத் தைரியமான தீர்க்கதரிசி, துன்மார்க்க சக்திகளை எதிர்த்து நின்றார். இருப்பினும், ஒரு நாள் எலியா குகைக்குள் ஒளிந்துகொண்டு, தமது மரணத்தை விரும்பினார் (1 இராஜா 19). எரேமியா என்ற இன்னொரு தீர்க்கதரிசியும் மோசமான நாட்களைப் பெற்றார்.

யோவான் ஸ்நானன் ஒருமுறை மோசமான நாளைப் பெற்றார். அவர் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு, அவருடைய சீஷர்களை அவர் இயேசுவினிடத்தில், "வருகிறவர் நீர் தானா? அல்லது வேறொருவர் வரக்காத்திருக்க வேண்டுமா?" (லூக். 7:20) என்று கேட்கும்படி அனுப்பினார். இது, யோவான் இயேசுவை, "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற

தேவ ஆட்டுக் குட்டி” (யோவான் 1:29, 36) என்று உறுதியாகச் சுட்டிக் காட்டியதற்குப் பின்னால் நடந்த சம்பவமாகும். இருப்பினும், சிறையின் இருள், குளிர், ஈரம் மற்றும் தனிமை இவற்றால் யோவான் ஸ்நானனின் நாள் மோசமாயிற்று.

**நமது மோசமான நாட்களுக்காக மற்றவர்களைக் குற்றம் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்**

மார்த்தாள் தனது மோசமான நாளுக்காக மரியாளையும் பின்பு, இயேசுவையும் குற்றப்படுத்தினாள். மற்றவர்களைக் குற்றப்படுத்துவது என்ற இந்த இயல்பை நாம் எப்போதும் எதிர்த்து நிற்க வேண்டும். நமது மோசமான நாட்களில், நடந்த சம்பவங்களினால் அல்ல மாறாக அவைகளைப்பற்றிய நமது பதில் செயல்களினாலேயே நமது நாள் அதிக மோசமாகி விடுகின்றது.

**நமக்கு நடப்பவை குறித்த நமது பதில் செயல்களுக்கேற்ற விளைவு உண்டு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்**

மார்த்தாள் இயேசுவினிடத்தில் கடிந்து பேசினபோது, அவள் இயேசுவால் கடிந்துகொள்ளப்பட்டாள். மோசமான நாளில் நாம் எதிர்மறையாகச் செயல்படும்போது, அது இன்னும் மோசமான நாளாகி விடுகிறது.

**நமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்டால் அன்றி, மோசமான நாள் என்பது நமது வாழ்க்கையின் கடைசி வார்த்தையல்ல என்ற உண்மையினால் ஆறுதலடையுங்கள்**

மார்த்தாள், அந்த மோசமான நாள் தனது வாழ்க்கையின் கடைசி வார்த்தையாய் இருக்க அனுமதிக்கவில்லை. எனவே யோவான் 11 மற்றும் 12ல் மார்த்தாளைப்பற்றிய அழகான காட்சிகளை நாம் காணமுடிகிறது. அதேபோல, நாமும் நமது மோசமான நாட்களோடு முடிந்துவிட நம்மை அனுமதிக்கக் கூடாது.

**வாழ்க்கையின் உண்மையான தேவையை மோசமான நாட்களிலிருந்து கற்றுக்கொள்ளத் தீர்மானியுங்கள்**

உங்களுக்கு ஒரு நாள் மோசமாகும்போது, நின்று, “இந்த நாளை மோசமாக்கியது எது? எனது சந்தோஷத்தைக் கெடுத்தது

எது? என்னைச் சுற்றியுள்ளவைகளை மோசமாக்கினது எது?" என்று யோசித்துப் பாருங்கள். அந்தக் காரணத்தை கண்டு பிடித்த பின்னர், "இது அவ்வளவு முக்கியமானதா?" என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். நமக்கு நடந்தவைகளி லிருந்து நாம் கற்றுக்கொள்ளத் தொடங்கும்போது, நமது மோசமான நாட்கள் நல்ல நாட்களாகிவிடும்.

## முடிவுரை

ஒவ்வொருவருக்கும் அவ்வப்பொழுது மோசமான நாள் அமைவதுண்டு. ஆனால் இந்த நாள் உங்கள் வாழ்க்கையில் மிகச் சிறந்த நாள் ஆகக்கூடும். மார்த்தாளின் இந்தச் சம்பவத்தி லிருந்து, ஆவிக்குரியவற்றிற்கு உங்கள் வாழ்வில் முதலிடம் தர வேண்டும் என்பதை நீங்கள் கற்கமுடியும். தேவையானது ஒன்றே; அது உங்களிடமிருந்து எப்போதுமே எடுக்கப்படாது- நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். இதுவரை உங்கள் நாள் எப்படியிருந்ததென்று நான் அறியேன். ஆனால் உங்கள் நாளை நீங்கள் நலமாக்க முடியும், அது ஒரு மாபெரும் நாளாகவும் முடியும். இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவரிடத்தில் கற்றுக்கொள்ள நேரம் ஒதுக்கித் தீர் மானிக்கும்போதும், அவருடைய சித்தத்தின்படி செய்ய முடிவு செய்யும்போதும் அப்படியாகும்.[15]

---

### குறிப்புகள்

*[1]அநேக பெண்கள் புரிந்துகொள்ளக்கூடிய வேறொரு விளக்கம்: வீடு கலைந்து கிடக்கும் சமயம் நாம் அங்கு சென்றுவிட்டால், "நீங்கள் வந்த நேரம் சரியில்லை" என்று அவர்கள் கூறுவார்கள். "எனது வீடு சாதாரணமாய் இப்படியிருக்காது" என்றும் கூறுவர். [2]பிற்பாடு, இயேசு பெத்தானியில் இராவிருந்துக்கு அழைக்கப்பட்டபோது, அந்த சம்பவத்தில் அவருடைய சீஷர்கள் குறிப்பிடப்படவில்லை (யோவான் 12:1-2). இருப்பினும், அவர் சீஷர்கள் அங்கிருந்தனர் (யோவான் 12:4; மத்தேயு 26:8). [3]மார்த்தாள், மரியாள், லாசரு, இயேசு மற்றும் அவரது பன்னிரு சீஷர்கள் ஆகியோர் ஒன்றாக விருந்துண்டிருக்க வேண்டும். [4]KJVயில் இலக்கியப் பூர்வமான நடை காணப்படுகிறது. [5]"தயாரிப்பு" என்பது சமையல் மட்டுமல்லாது, சமைத்ததைப் பரிமாறுதல், பந்தியில் யார் யார் எங்கு அமர்வது என்று தீர்மானித்தல் முதலியன (இயேசுவுக்கு அடுத்து அமர்வது யார்?) உள்ளடங்கியதாகும். [6]அந்நாட்களில், சாதாரணமாக, வீடுகளின் உள்புறம் கதவுகள் கிடையாது, அப்படியே இயேசுவும் மார்த்தாளும் இருந்த அறைகளுக்கிடையே கதவு இருப்பினும், அது திறந்து வைக்கப்பட்டிருக்கலாம்.*

[7]நான் இதைப் பிரசங்கிக்கும்போது, சற்று நகைச்சுவையாக, ‘‘நாம் அப்படிச் செய்வதில்லை, நான் பிரசங்கிக்கிறபோது நீங்கள் எனது ஒவ்வொரு வார்த்தை யையும் கவனிக்கிறீர்கள்! உங்கள் மனம் வேறு எந்தப் பிரச்சனையிலும் அலைபாய் வதில்லை அல்லது நீங்கள் மதிய உணவைப்பற்றி நினைப்பதில்லை’’ என்று கூறுவதுண்டு. [8]எனக்கு ஏற்படுகின்ற சொந்த கவலைகளின் முக்கிய மூலகாரணம் இதுவேயாகும். [9]அநேகப் பெண்கள் மார்த்தாளோடு ஒன்றிப்போகக் கூடும். ‘‘ஆண்களாகிய உங்களுக்கு ஒன்றும் புரிவதில்லை. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் சில காரியங்களைச் செய்யவேண்டியதாகிவிடுகிறது’’ என்பார்கள். [10]இது அனைத்தும் ஒரு அறையுள்ள வீட்டில் நடந்ததென்றால் (அப்படி யிருக்கவே வாய்ப்புகள் பலமாக உள்ளது) மார்த்தாள் எப்படிப்பட்ட கிளர்ச்சி செய்திருக்க வேண்டும்!

[11]ஒரு பிரசங்கத்தில், இவ்விடத்தில் நான் நகைச்சுவையாக, “உங்களுடைய விருந்தினர் அல்ல, மாறாக அவருடைய விருந்தினர்கள்’’ என்று கூறினேன். [12]இப்பாடத்திற்கு முன்போ அல்லது பின்போ, “இயேசு நேசிக்கிறார்” என்ற பாடல் பாடுவது நலமாகும். [13]“துண்டுதுண்டாய் சிதறிப் போகுதல்” என்பது அதிகமான மன அழுத்தத்தைக் குறிக்கப் பயன்படும் வார்த்தையாகும் (USA யில்). [14]அநேக வழிகளில் இதை நடைமுறைப்படுத்த இயலும். அநேக சமயங்களில் நாம் எல்லாருமே மார்த்தாளைப்போலவே உண்மையில் முக்கியமற்ற விஷயங்களுக்காய் அதிகக் கவலைப்படுகிறோம், முக்கியமானதைத் தவறவிடுகின்றோம். உங்களுக்கு அல்லது உங்கள் செய்தியை கேட்பவருக்கு முக்கியமாய்த் தோன்றும் ஒரு காரியத்தை இங்கு விளக்கலாம். [15]அழைப்பின்போது, நீங்கள், ‘‘நீங்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள இது ஒரு நன்னாள். … அல்லது நீங்கள் தட்டியெழுப்பப்பட இது ஒரு நன்னாள்” என்று குறிப்பிடலாம்.